**6. கோலியாத்தின் ஆயுதங்களைத் தாவீது எங்கு வைதிருந்தான்?**

1சாமுவேல் 17:54ன்படி, கோலியாத்தின் ஆயுதங்களைத் தாவீது தன்னுடைய கூடாரத்தில் வைத்துள்ளான். ஆனால், 1சாமுவேல் 21:9ல் கோலியாத்தின் பட்டயம் நோப் என்னுமிடத்திலுள்ள ஆசாரியனுடைய வீட்டில் இருந்துள்ளது. இம் முரண்பாட்டுக்கான காரணம் யாது? **(சிந்தியா போல், லண்டன்)**

இவ்விரு வசனங்களுக்கும் இடையில் முரண்பாடுகள் எதுவுமில்லை. 1சாமுவேல் 17:54ல் குறிப்பிட்டுள்ளபடி, ஆரம்பத்தில் தாவீது கோலியாத்தின் ஆயுதங்களைத் தன்னுடைய கூடாரத்திலேயே வைத்திருந்தான். அதன்பின்னர் அவன் அவற்றை ஆலயத்தில் அர்ப்பணித்திருந்ததினால், 1சாமுவேல் 21ம் அதிகாரத்தில் கோலியாத்தின் பட்டயம் ஆசாரியனாகிய அகிமலேக்கின் வீட்டில் இருந்தது. அக்காலத்தில் யுத்தத்தில் கைப்பற்றப்படும் எதிரிகளின் ஆயுதங்களை வெற்றியாளர்கள் தங்களுடைய தெய்வத்தின் ஆலயத்தில் வைப்பது வழக்கம் (1சாமு.5:2, 31:10, 2சாமு.8:7 பார்க்கவும்). தாவீதும் யுத்தத்தில் பெற்ற கோலியாத்தின் ஆயுதத்தைத் தேவனுக்கு நன்றி செலுத்தும் காணிக்கையாக ஆலயத்திற்கு கொடுத்திருந்தான். இதனாலேயே ஆசாரியனாகிய அகிமெலேக்கு அவனிடம், “அதை நீர் எடுக்க மனதானால் எடுத்துக்கொண்டுபோம்” (1சாமு.21:9) என்று கூறினான்.

© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, November, 2006